செய்தி வெளியீடு எண்: 1037 நாள்: 25.11.2010.

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருமழையினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து இன்று ஆய்வு செய்தார். உயிரிழந்தோர் குடும்பங்களுக்குத் தலா இரண்டு இலட்ச ரூபாய் நிவாரண நிதி!**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் இன்று (25.11.2010) தற்போது பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து, புனித ஜார்ஜ் கோட்டையில் ஆய்வு செய்தார்.

பெருமழையின் காரணமாக நெல்லை மாவட்டம் பாபநாசம், மணிமுத்தாறு மற்றும் ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணைகள் தவிர, தமிழகத்தில் உள்ள எல்லா அணைகளும், குளங்களும், ஏரிகளும் பெருமளவுக்கு நிரம்பியுள்ளன.

இதுவரை மதுரை, தர்மபுரி, கடலூர், ஈரோடு ஆகிய நான்கு மாவட்டங்களில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக வந்துள்ள தகவலையடுத்து; நீர் வடிந்ததற்குப் பிறகு பயிர்ச்சேதம் குறித்து மதிப்பீடு செய்து, உரிய நிவாரணம் வழங்கலாம் என்று மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

548 குடிசைகள் முழுமையாகவும், 1438 குடிசைகள் பகுதியாகவும், ஆக மொத்தம் 1,986 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியர்கள் ஏற்கனவே நிவாரண நிதி வழங்கி வருகிறார்கள்.

மழையின் காரணமாக உயிரிழந்த 179 கால்நடைகளுக்கும் உரிய நிவாரண நிதியை மாவட்ட ஆட்சியர்கள் வழங்கி வருகிறார்கள்.

40 ஆண்கள், 27 பெண்கள், 21 குழந்தைகள், ஆக மொத்தம் 88 பேர் மழையின் காரணமாக உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்குப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாயும், முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாயும், ஆக ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு

இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

மழையினால் பாதிப்புக்குள்ளான சாலைகள் – பாலங்களைப் பொறுத்தவரை, தற்காலிக சீரமைப்புப் பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தச் சாலைகளை நிரந்தரமாகச் சீரமைப்பதற்குத் தேவையான மதிப்பீடுகள் தயாரித்திட அறிவுறுத்தப்பட்டு; விரைவில் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை ஆணையர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை முதன்மைப் பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

****